5th September 1958]

SRI T. T. DANIEL : Sreepadam lands are lands in which the ex-Raj Pramukh, the erstwhile Ruler of the Travancore-Cochin State has some rights, although the patta stands in the name of the landholders and they have almost all the other rights. Will the Government think of the desirability of studying that problem and bring in some measure so that the rights of the ex-Raj Prumukh on those lands may be extinguished?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, the matter is being looked into. Now a major part of that income is spent on the temple. How best the amount of Rs. 30,000 required for the management of the temple could be found, whether the whole amount should be given by the Travancore-Cochin Devosum and the management looked after or a proportionate share given to the Madras Endowment Board and the management looked after, is under consideration.

Handloom cloth

* 65 Q.—SRI N. R. THIYAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கையால் நெசவு செய்த துணிதான் கட்டவேண்டுமென்று சட்ட திட்டங்கள் செய்ய சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை, ஐயா

SRI N. R. THIYAGARAJAN : ஸார், கைத்தறி நெசவுத் தொழிலை ஆதரிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் கைத்தறித்துணி உற்பத்தி செய்பவர்கள் கண்டிப்பாக கைத்தறி துணிகளைத்தான் கட்ட வேண்டும் என்று ஏதாவது ஒரு உத்தரவு போட முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கைத்தறி நெசவு ஆடைகளை அதிகமாக விற்பனை செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆனால் சட்டபூர்வமாக, மில் ஆடைகளை அணியக் கூடாது என்று சொல்லுவது நியாயமாக இருக்காது, நாட்டுக்கும் உகந்தது அல்ல.

* 66 Q.—SRI N. K. PALANISAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு ராஜ்ய வர்த்தக கார்ப்பொரேஷன் ஒன்றை (**State Trading Corporation**) அமைக்க 1958-௵ ஏப்ரல் ௴ 18-ம் தேதியன்று நடந்த முக்கூட்டு மாநாட்டின் போது ஆலைத் தொழிலாளிகள், ஆலை நிர்வாகஸ்தர்கள் இவர்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்தாருக்கு சிபாரிசு செய்தார்களா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

(இ) மேற்சொன்ன சிபாரிசை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A suggestion to this effect was made.

(*b*) No details were discussed at the Conference.

(*c*) The matter is under consideration.

[5th September 1958

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி ஒரு தொழில் கான்பரன்ஸ் கூட்டி அதில் வெளிநாட்டுக்கு நமது கைத்தறித் துணிகளை அனுப்புவதற்கு ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அவ்விதம் துணிகளை அனுப்பும்போது கார்ப்பரேஷனுக்கு வெளியே உள்ள துணிகளையும் அனுப்ப முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : **Counting the chickens before they are hatched** என்று சொல்வார்கள். இதைப்பற்றியுள்ள யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. கார்ப்பரேஷன் அமைத்த பிறகு இதைப்பற்றி யோசனை செய்யலாம்.

Textile industry

* 67 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a conference on 18th April 1958 to discuss various matters relating to the crisis in textile industry in Madras State;

(*b*) what the main points discussed at the conference are;

(*c*) whether any decisions have been taken; and

(*d*) whether they have been implemented?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*), (*c*) & (*d*) Yes, Sir; an informal exchange of views with the representatives of the mills, representatives of labour and representatives of handloom industry was held on 18th April 1958. All aspects of the textile industry were discussed and suitable steps have been taken to mitigate the present difficulties of the different sectors of the industry. It is not in the public interest to disclose more details of the discussions of the conference at this stage.

SRI N. K. PALANISAMI: இந்த மகாநாட்டில் 'ப்ரொடக்ஷன் ஸ்டாட்டஸ்கோ மெயின்டைன்', பண்ணவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதாக தெரிகிறது. அதன்பின் அது ஒப்புக்கொள்ளப்பட்டபிறகு கனம் மந்திரி அவர்கள் மதுரைக்கு சென்று ஹார்வி மில்லில் கொடுக்கப்பட்டு வரும் டியர்னெஸ் அலவன்ஸில் 25 பர்ஸெண்டு குறைக்கவேண்டும் என்று சொல்லுவது முறையாகுமா? இப்போது பல இடங்களிலும் ஷிப்டுகள் எல்லாம் குறைக்கப்பட்டும், பல இடங்களில் மில்கள் மூடப்பட்டும் வருகின்றன. இந்த சமயத்தில், இதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் பல கேள்விகள் இருக்கின்றன. முதலாவதாக வெளிநாட்டுக்கு நூல் ஏற்றுமதி செய்ய அனுமதித்தால் நெருக்கடி தீரும் என்று மில் முதலாளிகள் சார்பில் கூறப்பட்டது. அந்த யோசனையை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு தெளிவு காண்கின்ற வரையிலும் மில்களை மூடக்கூடாது, அப்போது உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்கும் என்று சொல்லப்பட்டது. இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்டவட்டமாக அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே அந்த கூட்டத்தில் இதைப்பற்றி திட்டவட்டமாக எடுக்கப்பட்ட முடிவு என்று இதை சொல்வதற்கில்லை.